1993 டிசம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 85, டாக்டர் எம். பி. சேகர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

85—

குடும்பக் கட்டுப்பாடு செய்வோருக்கு உதவித்தொகையை உயர்த்துதல்

*21688—டாக்டர் எம். பி. சேகர் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை உயர்த்திக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு அரசு வழங்கும் உதவித்தொகையை உயர்த்திக் கொடுப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

டாக்டர் எம். பி. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு ரூபாய் 210 வழங்கப்பட்டு வருகிறது. இதை சற்றாவது உயர்த்திக் கொடுக்க நமது அரசு பரிந்துரை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதியிலே இருந்துதான் நாம் அந்த உதவித் தொகையைக் கொடுத்து வருகிறோம். நம்முடைய அரசு அதிலே ஒரு பகுதியை ஏற்றுக் கொள்கிறது. இப்போது மத்திய அரசாங்கம் உயர்த்திக் கொடுத்தால் நாமும் இங்கே கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. நாமாக கொடுப்பதற்கான வாய்ப்பு தற்போது இல்லை. வேண்டுமானால் மத்திய அரசாங்கத்திற்கு, இதை உயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, வேண்டுகோளாக நாம் அனுப்பலாம்.

முற்பகல் 10.20

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்கின்ற தாய்மார்களில் ஒரு சதவிகிதத்தினர், அந்தக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையிலே ஃபெயிலியர் ரேட்டுக்கு

உள்ளாகிறார்கள். அப்படியாகிறபொழுது அவர்கள் மீண்டும் கருத்தரிக்கின்றபொழுதுதான் அவர்களுக்குக் குடும்பக் கட்டுப் பாடு அறுவை சிகிச்சை ஃபெயிலியர் ஆகியிருக்கிறது என்றே தெரிய வருகிறது. அப்படிப் பாதிக்கப்படுகின்ற தாய்மார்கள் அவர்களுடைய மனநிலை கெடுகின்ற அளவிற்கு பாதிக்கப் படுகிறார்கள். அப்படிப் பாதிப்புக்குள்ளாகின்ற தாய்மார் களுக்கு விசேஷ உதவித் தொகையைத் தந்து மீண்டும் அறுவைச் சிகிச்சை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, ஒரு சிறிய அளவிலே சதவிகிதம் அந்த மாதிரி நடப்பதற்கு வாய்ப்பு இருக் கிறது. அப்படி நடக்கிறபொழுது தனிப்பட்ட முறையிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மருத்துவர்களோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரோ அதற்குப் பொறுப்பேற்று அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறார்கள். அதற் காகத் தனியாக ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டிய அளவிற்கு இதுவரை பெரிய அளவிற்குப் பிரச்சினை வரவில்லை. அந்தப் பகுதியிலே இந்தப் பிரச்சினையை அவர்கள் சமாளித்துக் கொள்கிறார்கள். அது மட்டுமல்ல, முதன்முறையாக இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கு வருகிறபொழுது அர சாங்கம் ஒதுக்கியிருக்கிற—மத்திய அரசும் ஒதுக்கி, மாநில அரசும் சேர்ந்து ஒதுக்கியிருக்கிற பணத்திற்கு மேலாக, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வேறு இன்சென்டிவ்ஸ் அவர்களுக்குக் கொடுக்கப் படுகிறது. பாத்திரங்களாக— மற்ற இன்சென்டிவ்ஸ் அவர் களுக்குக் கொடுக்கப்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட முறை, இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு முறையைச் சிறப்பாகச் செய்வதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக் கிறோம். அதனால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே முத லிடத்திலே நம்முடைய தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு செய்யக்கூடிய பெண் களுக்கு தொகையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்ற கேள்வியில்— மாண்புமிகு அமைச்சரவர்களே இதுபோன்று முன்னாலே ஒரு பதிலை இதேபோன்ற கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறார்கள். குறிப்பாக, பெண்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்கிறபொழுது மீண்டும் குழந்தை பிறக்கிற பொழுது கணவனுக்கும் மனைவிக்கும் சந்தேகம் ஏற்பட்டு வாழ்க்கை விவாகரத்து ஆகிற வரையிலும்.,

1993 டிசம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பதைப் பற்றிய கேள்வி. நீங்கள் கணவன், மனைவிக்குள் சண்டை வருவதையெல்லாம் இங்கே பேசிக் கொண்டிருக்கக்கூடாது. இது அந்தத் தொகையை உயர்த்திக் கொடுப்பதை பற்றிய கேள்வி.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்த பின்பு ஒரு வேளை குழந்தை பிறந்தால் எந்தச் சந்தேகமும் வருவதற்கு வாய்ப்பே கிடையாது. எனவே, அதிலே நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. பெண்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்த பின்னாலே அவர்களுக்குத் தவறி மீண்டும் குழந்தை பிறந்து விட்டால் அதிலே சந்தேகம் வருவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. நீங்கள் சந்தேகத்தைக் கிளப்பாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, தொகையை உயர்த்திக் கொடுப்பதைப் பற்றியது. திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இங்கே பெண்களுக்கு மட்டும் குடும்பக் கட்டுப்பாடு உதவித் தொகையை உயர்த்திக் கொடுப்பது பற்றிய கேள்வியாக இருந்தாலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் கேள்வி. கேள்வியாக இருந்தாலும் என்பதல்ல.

திரு. கி. தருமலிங்கம் : குடும்பக் கட்டுப்பாடு செய்த சில பெண்கள் அறுவைச் சிகிச்சையில் ஏற்பட்ட சிறு சூளறுபடிகளினால் வேலை செய்ய முடியாத காரணங்களை நாங்கள் பார்க்கிறோம். எனவே, 50 விழுக்காடுகள் பெண்களுக்கும், 50 விழுக்காடுகள் ஆண்களுக்கும் அந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கட்டாயமாக ஆக்கிச் செயல்படுத்த ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மிகக் குறைந்த அளவிற்கு சதவிகிதம் இது போல பெயிலியர் ஆகிவிடும் அல்லது உடல்நிலை பாதிக்கப்பட்டு அவர்களுக்கு சில பிரச்சினைகள் ஏற்பட்டு

விடக் கூடும். ஆனால் இந்த அறுவை சிகிச்சை செய்த காரணத்தாலேயே பாதிக்கப்படுகிறது என்று எடுத்துக் கொள்ள முடியாது. அவர்களுடைய உடல்வாகு இந்த அறுவைச் சிகிச்சை செய்யாமல் இருந்தாலும் கூட பாதிப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். எனவே, அதையே காரண மாக வைத்து நாம் இதை விட்டுவிட முடியாது. எனவே, இந்த நாட்டுக்குத் தேவையான மிகப் பெரிய ஒரு நல்ல திட்டம் இது என்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை மிகத் தெளிவாக அரசாங்கம் செய்து வருகிறது. எனவே, நாம் முன்னணியிலே கூட இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல ஆண்களுக்கும் இதைச் செய்ய வேண்டு மென்ற ஒரு திட்டம் ஏற்கனவே இருந்து செய்யப்பட்டு, அது கடைசியிலே சில பிரச்சினைகளால் கைவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இட்டிருக்கிற உத்தரவுப்படி ஆண்களுக்கும், அவர்களிடத்திலே பிரச்சாரத்தின் மூலமாக இதைப் பரப்பி அவர் களாகவே முன்வர வைத்து, ஆண்களுக்கும் இதைச் செய்வதற் கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் உத்தர விட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப இந்த அரசாங்கம் பிரச் சாரத்தின் மூலம் அவர்களைக் கொண்டு வந்து செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. யாரையுமே கட்டாயப் படுத்துவதற்கோ அல்லது வலுக்கட்டாயமாகக் கொண்டு வந்து செய்வதோ அவ்வளவு சரியல்ல என்ற காரணத்தினாலேதான் அவர்களுக்கு இருக்கிற, அந்தக் குடும்பத்திற்கு இருக்கிற நன்மையை அவர்களுக்குப் பிரச் சாரத்தின் மூலமாக நேரடியாகச் சொல்லி, அவர்களாகவே இதை ஏற்றுக் கொள்ள வைத்து இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற முயற்சியை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு ஒவ்வோர் ஒன்றியத்திற் கும் இவ்வளவு செய்ய வேண்டுமென்று ஒரு ‘டார்கெட்’ நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த டார்கெட்டை ‘அச்சீவ்’ செய்வதற்கு, சில இடங்களில் சில நேரங் களில் 90 வயதான கிழவியைக்கூட கொண்டு போய் ஆப ரேஷன் செய்கிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா? இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1993 டிசம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள் மூலம் இந்தத் திட்டத்திற்கு ஏதாவது குந்தகம் வருகிற மாதிரிக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே போகக் கூடாது. இதனை நன்றாகச் செயல்படுத்துவதற்குரிய கேள்விகளாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் சில நேரங்களில் என்று அவர்களே சொல்லி விட்டார்கள். எனவே, இப்படிப்பட்ட இந்த சமுதாயத்திலே இவ்வளவு பெரிய ஜனத் தொகையிலே, இவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறபோது, எங்கேயாவது ஒன்றிரண்டு பேர் இந்தத் தவறுகளைச் செய்தால், அதனை எங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிற போது, நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால், அவர் சொன்னதிலேயிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், 90 வயதிலே கூட தமிழகத்திலே இருக்கிறவர்கள் திடகாத்திரமாக இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கிறவகையிலே தான் அவர் கேட்ட கேள்வி இருக்கிறது. எனினும், இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல், நடவடிக்கை எடுப்பதற்காக மிகப் பெரிய அளவிலே இந்தத் துறை கண்காணிப்பாக அதனைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மற்ற இடங்களிலேயிருந்து வந்து பார்க்கக்கூடிய அதிகாரிகள், மத்திய அரசு அதிகாரிகள் கூட, குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரை, இந்தத் துறை மிகச் சிறப்பாக மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செய்து கொண்டிருக்கிறது; கிடைக்கிற பணம் முறையாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது; நியாயமானவர்களுக்குச் செய்யப்படுகிறது என்பதை ஏற்றுக் கொண்டு போயிருக்கிறார்கள். எங்கேயாவது ஒன்றிரண்டு தவறுகள் இருக்கலாம். அதுவும் 90 வயது என்பதெல்லாம் இருக்க முடியாது. அதாவது, 45, 50 வயதுக்கு மேலே இருப்பவர்களைக் கொண்டு வந்து, அப்படி செய்திருக்கக் கூடும். அப்படி இருந்தால், அது தவறு; அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 86, 6 டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

86—

சங்ககிரி ஒன்றிய நெசவாளர்களுக்கு தறிக்கூடங்களுடன் வீடு கட்டிக் கொடுத்தல்

*20029—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—